செய்தி வெளியீடு எண்:684 நாள்: 1210.2017

## <u>செய்தி வெளியீடு</u>

# அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்தும் திட்டம்

ஏழைகள் மற்றும் நடுத்தர வகுப்பினர் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிறுகச்சிறுக சேமித்த பணத்தைக் கொண்டு வருங்காலத்தில் சொந்தமாக வீடு கட்டி அதில் நிம்மதியாக வாழ்வோம் என்ற கனவுடன் விலை குறைவான வீட்டு மனைகளை வாங்கியுள்ளனர். பெரும்பாலும், இவர்கள் விவரம் ஏதும் அறியாமல் விலை குறைவாக இருக்கின்ற ஒரே காரணத்தினால், அனுமதியற்ற மனைப்பிரிவுகளில் உள்ள மனைகளை வாங்கியுள்ளனர்.

இப்படிப்பட்ட மனைப்பிரிவுகளில் சாலை வசதி, தெரு விளக்குகள், கழிவு நீர் கால்வாய், குடிநீர் வசதி போன்ற அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே இம்மனைகளை வாங்கியுள்ள விவரம் அறியாத பொதுமக்களின் இன்னல்களைப் போக்கும் வகையில் இம்மனைப் பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்த ஒரு புதிய திட்டம் வகுக்கப்பட்டு

அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 4.5.2017ல் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

மேற்கண்ட திட்டத்தைச் செயல்படுத்துவதில் நடைமுறை சிக்கல்கள் உள்ளதாக பொதுமக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகள் மூலம் தெரிய வந்தது. மேலும் இத்திட்டத்தின் மூலம் குறைவான அளவிலேயே மனைப்பிரிவுகளையும், மனைகளையும் வரன்முறைப்படுத்த விண்ணப்பங்கள் பெறப்பட்டன. மேலும், இத்திட்டத்தின் விளக்கக் கூட்டத்தில் மனை வாங்கிய பொதுமக்களும், மனைப் பிரிப்பாளர்களும் கலந்துகொண்டு மேலே குறிப்பிட்டவாறு தங்கள் கருத்துகளை தெரிவித்தனர்.

இக்கோரிக்கை மனுக்களையும், கருத்துகளையும் அரசு கவனமாகப் பரிசீலித்தும், 11.10.2017 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டு, இத்திட்டத்தில் கீழ்க்கண்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன:–

(i) இந்த திட்டத்தின் காலம் ஆறு மாதத்திலிருந்து ஒரு வருடமாக 03.05.2018 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(ii) விற்கப்பட்ட மனைகளின் அடிப்படையில் மனைப்பிரிவுகளை மூன்று வகைகளாகப் பிரித்து வரன்முறைபடுத்தும் முறை நீக்கப்பட்டுள்ளது. இதனால் அனுமதியின்றி பிரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் உள்ளது உள்ளபடியே வரன்முறை செய்யப்படும். ஒரு மனைப் பிரிவில் குறைந்த பட்சம் ஒரு மனை விற்கப் பட்டிருந்தால் அந்த மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்படும். மேலும், மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகள் 'உள்ளது உள்ளபடி' நிலையில் வரன்முறைப்படுத்தப்படும்.

(iii) மனைப்பிரிவு மேம்பாட்டாளர்கள் தங்கள் மனைப்பிரிவில் வரன்முறைப்படுத்தக் கோரும் விற்கப்படாத மனைகளின் பரப்பளவில் 10 சதவீத நிலத்தை OSR–க்காக ஒதுக்கி உள்ளாட்சிக்கு தானமாக வழங்க வேண்டும். OSR எத்தகைய அளவில் இருப்பினும், விதிகளில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் தனி நபர்களால் வாங்கப்பட்ட மனையை வரன்முறைப்படுத்தும் போது OSR விதிகளிலிருந்து முழு விலக்கு அளிக்கப்படும்.

(iv) உத்தேச திருத்த வரன்முறைப்படுத்தும் விதி 8(i) மற்றும் (ii)-க்கு பிறகு கீழ்க்கண்டவை சேர்க்கப்படுகிறது :

(a) சென்னைப் பெருநகரப் பகுதியில் 5.8.1975 முதல் 20.10.2016 வரை;

(b) சென்னைப் பெருநகரப் பகுதிக்கு வெளியே அமைந்துள்ள ஊரகப் பகுதிகளில் 29.11.1972 முதல் 20.10.2016 வரை மற்றும்

(c) சென்னைப் பெருநகரப் பகுதிக்கு வெளியே நகரப் பகுதிகளில் 1.1.1980 முதல் 20.10.2016 வரை

ஏற்படுத்தப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகள் / மனை உட்பிரிவுகளில் அமைந்துள்ள மனைகளை வரன்முறைப்படுத்த இத்திட்டம் பொருந்தும்.

(d) மேற்கண்ட தேதிகளுக்கு முன்னர் வாங்கப்பட்ட அனைத்து அனுமதியற்ற மனைப்பிரிவுகள் மற்றும் மனைகள் வரன்முறைப்படுத்தப்பட்டதாகக் கருதப்படும்.

(v) வளர்ச்சிக் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க தற்போது செலுத்தப்படவேண்டிய கட்டணங்களின் விவரங்கள் பின்வருமாறு:—

ரூபாய் / சதுர மீட்டர்

| கட்டணம் | மாநகராட்சி | நகராட்சி | | பேரூராட்சி | கிராம ஊராட்சி |
|---|---|---|---|---|---|
| | | சிறப்பு நிலை மற்றும் தேர்வு நிலை | நிலை—1 மற்றும் நிலை—2 | | |
| 1. தற்போதுள்ள வளர்ச்சிக் கட்டணம் | 600 | 350 | 250 | 150 | 100 |
| 2. குறைக்கப்பட்ட வளர்ச்சிக் கட்டணம் | 500 | 250 | 150 | 75 | 25 |
| 3. வரன்முறைக் கட்டணம் | 100 | 60 | 60 | 30 | 30 |
| **மொத்தக் கட்டணம் (2+3)** | **600** | **310** | **210** | **105** | **55** |

அத்துடன் கூர்ந்தாய்வுக் கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.500/– செலுத்தப்படவேண்டும்.

ஏழை, எளிய மக்களின் நலனையே குறிக்கோளாகக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பொதுமக்கள் பெரிதும் பயனடையும் வகையில் மனைப்பிரிவுகள் மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தும் திட்டத்தினை மேலும் எளிமைப்படுத்தியும், கட்டணங்களைக் குறைத்தும் ஆணையிட்டுள்ளது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**